

வெள்ளிக் கவசத்தில்...

திருப்பத்தூர் அடுத்த தோரணம்பதி கிராமம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் நவராத்திரி உற்சவ திருவிழா நிறைவு விழாவை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை வெள்ளிக் கவச அலங்காரத்தில் அம்மன்.

ரூ. 30-க்கு சன்ன ரக அரிசி விற்பனை: ஆட்சியர் தொடங்கி வைத்தார்

வேலூர், அக். 20: வேலூர் மாவட்டத்தில் குடும்பம் ஒன்றுக்கு 5 கிலோ வீதம், ஒரு கிலோ ரூ. 30-க்கு சன்ன ரக அரிசி விற்பனையை ஆட்சியர் பி.எஸ். லீலா அலெக்ஸ் தொடங்கி வைத்தார்.

வெளிச்சந்தையில் ஏற்படும் அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில், விலை நிலைப்படுத்தும் திட்டத்தின் கீழ் கூட்டுறவு பண்டகசாலைகள் மூலம் வாயிலாக 'ஏ' தர சன்ன ரக அரிசியை கிலோ ரூ. 30-க்கு குடும்பம் ஒன்றுக்கு 5 கிலோ வீதம் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவின் அடிப்படையில், வேலூர் மாவட்டத்துக்கு முதல்கட்டமாக 23 மெட்ரிக் டன் 'A' தர சன்ன ரக அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் சன்ன ரக அரிசி விற்பனையை ஆட்சியர் பி.எஸ். லீலா அலெக்ஸ் திங்கள்கிழமை தொடங்கி வைத்தார். மேலும், குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வேலூர் மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை தலைமை அலுவலக வளாகம் கற்பகம் சுய சேவை பிரிவு மற்றும் எழுதுபொருள் பிரிவு, காட்பாடி பிரதம கூட்டுறவு பண்டகசாலை,குடியாத்தம் டெக்ஸ்டைல் பிரதம கூட்டுறவு பண்டகசாலை, வேலூர் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம், குடியாத்தம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் ஆகிய 6 இடங்களில் சன்ன ரக அரிசி விற்பனை நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் சன்ன ரக அரிசி விற்பனையை தொடங்கி வைத்த ஆட்சியர் பி.எஸ். லீலா அலெக்ஸ். உடன், சட்டப்பேரவை உறுப்பினர் எம்.எம்.வினோத் கண்ணன் உள்ளிட்டோர்.

தொடக்க நிகழ்வில், வேலூர் சட்டப் பேரவை உறுப்பினர் எம்.எம்.வினோத் கண்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் து.சுரேஷ், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திருகுணஜயப்பதுரை, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சுற்றுலாப் பயணிகளுக்கு போலீஸார் விழிப்புணர்வு



சுற்றுலாப் பயணிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய போலீஸார்.

திருப்பத்தூர்,அக்.20: ஏலகிரி மலையில் சுற்றுலாப் பயணிகளுக்கு போலீஸார் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

ஏலகிரி மலைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு காவல் நிலைய ஆய்வாளர் பாரதி தலைமையிலான போலீஸார் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

பல்வேறு பகுதிகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இந்நிலையில், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஆய்வாளர் பாரதி மற்றும் போலீஸார் விழிப்புணர்வு வழங்கினர். அப்போது சுற்றுலாப் பயணிகள் மலைப்பாதையில் வாகனங்களை கவனமாக இயக்க வேண்டும் என்றும், போக்குவரத்து விதிகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினர். மேலும், சுற்றுலாத் தலங்களில் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றி, எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படாத வகையில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றனர்.

கராத்தே பயிற்சிப் பள்ளி போட்டிகள்



பரிசளிப்பு விழாவில் பங்கேற்றோர்.

குடியாத்தம், அக். 20: குடியாத்தம் அரிமா கராத்தே பயிற்சிப் பள்ளி சார்பில், 54 ஆவது ஆண்டு போட்டிகள் மற்றும் கராத்தே பெல்ட் வழங்கும் நிகழ்ச்சி வாரியார் நகரில் அமைந்துள்ள உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு அரிமா கராத்தே பயிற்சிப் பள்ளி நிறுவனரும், கராத்தே தேசிய நடுவருமான ஆர்.யுவராஜ் தலைமை வகித்தார். இங்கு வீரர்களுக்கு காரத்தே, சிலம்பம், வில்-வித்தை, துப்பாக்கி சுடுதல் உள்ளிட்ட போட்டிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 100 க்கும் மேற்பட்ட இருபால் மாணவர்கள் கலந்து கொண்டனர். போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் உலக கராத்தே நடுவர் எம்.சம்பத்குமார்,கேலக்ஸி ரோட்டரி சங்கத் தலைவர் பிரதீப் ஜெயசீலன் ஆகியோர், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். நிகழ்ச்சியில் கராத்தே மாஸ்டர்கள் ராஜேஷ், அறிவொளி, ஆதவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

100 % தேர்ச்சி வழங்கிய அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு கேடயம்



பாராட்டு பெற்ற தலைமை ஆசிரியர்களுடன் ஆட்சியர் ந. பிரியா ரவிச்சந்திரன், முதன்மைக் கல்வி அலுவலர் ம.மோகனா.

ராணிப்பேட்டை, அக் 20: ராணிப்பேட்டையில் நடைபெற்ற மாவட்ட கல்வி மீளாய்வுக் கூட்டத்தில் பொதுத்தேர்வுகளில் 100 சத தேர்ச்சி வழங்கிய அரசுப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களை பாராட்டி ஆட்சியர் ந. பிரியா ரவிச்சந்திரன் கேடயம் வழங்கினார்.

கல்வி மீளாய்வுக் கூட்டம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. ஆட்சியர் ந.பிரியா ரவிச்சந்திரன் தலைமை வகித்து பேசியது:

மாவட்டத்தில் இடை நின்ற மாணவ மாணவிகள் அனைவரையும் அக்டோபர் 30-ஆம் தேதிக்குள் மீளவும் பள்ளியில் சேர்க்க வேண்டும். இந்த கல்வி ஆண்டில் பொதுத்தேர்வுகளில் நல்ல தேர்ச்சி விகிதம் வழங்க ஆசிரியர்களின் சிறந்த முன்னெடுப்புகளை அடையாளம் கண்டு அனைத்து பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

வாய்ஸ் கால் மூலம் பள்ளிக்கு வராத மாணவர்களை தொலைபேசியில் பெற்றோருக்கு தகவல் தெரிவித்து தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். காலை மற்றும் மாலை நேர சிறப்பு வகுப்புகளை தொய்வின்றி பள்ளிகளில் நடைமுறைப் படுத்த வேண்டும்.

அடுத்த மீளாய்வுக் கூட்டத்தில் சிறந்த கற்பித்தல் பணியை செய்யும் ஆசிரியர்கள் பாராட்டப்படுவார்கள். வட்டார கல்வி அலுவலர்கள், கல்வி ஆய்வு அலுவலர்கள் தொடர்ந்து பள்ளிகளை ஆய்வு செய்யவும் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் அவற்றை உடனடியாக சரி செய்ய வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் அரசு உயர்நிலைப்பள்ளிகள் முள்வாய், உள்ளியநல்லூர், பள்ளூர், கணபதிபுரம், கங்காபுரம், பாகவெளி, மேச்சேரி, அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளத்தூர், அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி திருமால்பூர், சிஎஸ்ஐ நிதிஉதவி பெறும் பள்ளி தாளிக்கால் ஆகிய பள்ளிகளில் கடந்த ஆண்டு பொதுத்தேர்வில் 100சத தேர்ச்சி காட்டியதற்காக அப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் பாராட்டி ஆட்சியர் பிரியா ரவிச்சந்திரன் கேடயம் வழங்கினார்.

மேலும் கற்பித்தல் பணியில் சிறப்பாக பணியாற்றிய அரசு மேல்நிலைப்பள்ளிகள், பூண்டி ஆசிரியர் கோபி, வள்ளுவம்பாக்கம் ஆசிரியர் ஸ்ரீகாந்த், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளின் ஆசிரியர்கள் பில்லேரி உமாபதி, மேல்புதுப்பாக்கம் கருணாகரன் ஆகியோரின் சிறப்பாக பணிக்காக அவர்களை பாராட்டி சான்றிதழ்களை ஆட்சியர் வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ம.மோகனா மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள், வட்டார கல்வி அலுவலர்கள் அனைவரும் பங்கேற்றனர்.

வடச்சேரியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு



குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்த மாதனூர் ஒன்றியக்குழு தலைவர் ப.ச. சுரேஷ்குமார்.

ஆம்பூர், அக். 20: மாதனூர் ஊராட்சி ஒன்றியம் வடச்சேரி ஊராட்சியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் சீரமைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

வடச்சேரி ஊராட்சித் தலைவர் அனிதா பாபு தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாதனூர் ஒன்றியக்குழு தலைவர் சுரேஷ்மகுமார், குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தைத் திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஊராட்சித் தலைவர்கள் வெங்கடேசன், பூபதி, ஒன்றியக் குழு உறுப்பினர் ஆ.கார்த்திக் ஜவகர், ஊராட்சி துணைத் தலைவர் மீனாரவி மற்றும் வார்டு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

அகரம்சேரி பாலாற்றுப்படுகையில் 200 மரக்கன்றுகள் நடவுமஅகரம்சேரி ஊராட்சியில் பாலாற்றுப் படுகையில் 200 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

குடியாத்தம் ஒன்றியக் குழு உறுப்பினர் ஆனந்திமநித்தியானந்தம் ஏற்பாட்டில், ஊராட்சித் தலைவர் வச்சலா சேகர்தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியாத்தம் ஒன்றியக் குழு தலைவர் என்.இ.சத்யானந்தம், மாதனூர்ஒன்றியக் குழு தலைவர் அகரம்சேரி ப.ச.சுரேஷ்குமார், ஒன்றியக் குழுத் துணைத் தலைவர்கே.கே. அருண் முரளி ஆகியோர்பங்கேற்று மரக்கன்றுகளை நட்டனர்.

பாலாற்றுப் படுகையில் பசுமைப் பரப்பை அதிகரிக்கும்நோக்கில் ஆலம், அத்தி, வேம்பு,நாவல், நீர்மருது, இலுப்பை உள்ளிட்ட வகைகளைச்சேர்ந்த 200 மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், வேர்கள் அறக்கட்டளையைச் சேர்ந்தவடிவேல் சுப்பிரமணி, ரவீந்திரன் சுப்பிரமணி, அருள் கணேஷ், இயற்கை ஆர்வலர் ஸ்ரீகாந்த் மற்றும் ஆர்.மஞ்சுநாதன்,எஸ்.பிரச்சினகுமார், ஜி.ஜெயக்குமார், ஜே.சார்லஸ், ஜெயக்குமார் (எ) குள்ளன், எம்.சுப்பிரமணி, சுப்பகார்த்திகேயன், சரத்சிங், பரத் ரவீசந்திரன், அலுவலகக்கணக்காளர் செபஸ்டீன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

விஜயதசமியையொட்டி கோயில்கள், பள்ளிகளில் வித்யாரம்பம்

வேலூர், அக். 20: விஜயதசமியையொட்டி ஒருங்கிணைந்த வேலூர், மாவட்டத்திலுள்ள கோயில்கள் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் வித்யாரம்பம் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது **(படம்).**

இதையொட்டி, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள கோயில்கள், அரசு மற்றும் தனியார் தொடக்கப் பள்ளிகளில் செவ்வாய்க்கிழமை வித்யாரம்பம் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.



பெற்றோர் தங்களது குழந்தைகளுக்குப் புத்தாடை அணிவித்து அழைத்து வந்து, பரப்பி வைக்கப்பட்டிருந்த நெல் மற்றும் அரிசியில் குழந்தைகளின் கைப்பிடித்து 'அ' என முதலெழுத்தை எழுதக் கற்றுக் கொடுத்தனர்.

தொடர்ந்து, பள்ளிகளில் மழலையர் மற்றும் தொடக்க வகுப்புகளில் தங்களது குழந்தைகளை ஆர்வத்துடன் சேர்த்தனர். இதனால், தொடக்கப் பள்ளிகளில் பெற்றோர்களின் கூட்டம் அலைமோதியது.

மீனாட்சி– சுந்தரேஸ்வரர் கோயிலில் நவராத்திரி விழா நிறைவு



நிறைவு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்றோர்.

குடியாத்தம், அக். 20: குடியாத்தம் தங்கம் நகரை அடுத்த மீனாட்சியம்மன் நகரில் அமைந்துள்ள அருள்மிகு மீனாட்சியம்மன் சமேத சுந்தரேஸ்வரர் கோயிலில் நவராத்திரி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நிறைவு நாள் நிகழ்ச்சிக்கு கோயில் தர்மகர்த்தா பி.ஹேமச்சந்திரன் தலைமை வகித்தார். கோயில் நவராத்திரி விழாக் கமிட்டி அமைப்பாளர் எஸ்.தோன்றல்நாயகன் முன்னிலைவகித்தார். நிறைவு நாளான திங்கள்கிழமை இரவு உற்சவர் மீனாட்சியம்மன், சரஸ்வதி அம்மன் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இதில் குடியிருப்போர் நலச் சங்கத் தலைவர் ஜி.லிங்கசாரதி, விழாக் குழுச் செயலர் டி.கே. இளங்கோ, நிர்வாகிகள் ஏ.ராஜசேகர், பி.ஆறுமுகம், எஸ்.முரளிதரன், எம்.ஆர்.சீனிவாசன், டி.பி.சீனிவாசலு, எம்.குலசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நாளைய மின்தடை

ராணிப்பேட்டை சிப்காட்

நாள்: 22-10-2026, நேரம் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை.

மின்தடை பகுதிகள்: லாலாப்பேட்டை, ஏகாம்பரநல்லூர், சிப்காட் பேஸ் -3, சிப்காட், பெல் டவுன்ஷிப், கிருஷ்ணாவரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகள்.

CHANGE OF NAME

I, **HABIB JABBAR ABDUL**
S/o. Abdul Jabber
(Old Name)
Date of Birth: 17.05.1962
residing at No.14/42,
1st Street, Vanakara Kollai,
Ambur-635802, Tirupattur
District, Tamil Nadu
shall henceforth be known as
HABEEB JABBAR ABDUL
S/o. Abdul Jabbar.S
(New Name)
Ambur, 19.10.2026 — Habib Jabbar Abdul S/o. Abdul Jabber

CHANGE OF NAME

I, **MIR MOHAMMED HASHIM**
Surname: MANZOOR ALI
(Old Name)
S/o.Manzoor Ali,
Date of birth: 03.01.2005
residing at No.7/15,
Hussain Pura Street, Udayaendiram,
Vaniyambadi, Uthayendram Post,
Ambur Taluk, Vellore District-635754
shall henceforth be known as
MIR MD HASHIM M
(New Name)
Vellore, 11.08.2026 — Mir Mohammed Hashim Surname: Manzoor All

CHANGE OF NAME

I, **SANTHI SUBRAMANIYAN**
Widow daughter of Late.GOVINDASAMY
(Army No.136405, Rank: SPR)
Residing at Anna Nagar,
Kalainjar Nagar, Poigai Village,
Sathiyamangalam, Anaicut taluk,
Vellore District, Tamilnadu-632114.
In my father's army records, my name was wrongly entered as
SANTHI
instead of my correct name is
SANTHI SUBRAMANIYAN
and my date of birth is 05-06-1966.
Vellore, 22.12.2025
Santhi Subramaniyan (Daughter)

யூனியன் வங்கி / Union Bank of India
திருப்பாற்கடல் கிளை
6/2A, திருப்பாற்கடல் சாலை, திருப்பாற்கடல், இராணிப்பேட்டை, தமிழ்நாடு - 632508

[விதி - 8 (1)] சுவாதீன அறிவிப்பு

கீழ் கையொப்பமிட்டுள்ள, யூனியன் பேங்க் ஆஃப் இந்தியாவின் திருப்பாற்கடல் கிளை, 6/2A, திருப்பாற்கடல் சாலை, திருப்பாற்கடல், இராணிப்பேட்டை தமிழ்நாடு - 632508 -இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகிய நான், நிதிச் சொத்துகளின் பிணையாக்கம் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பிணையுரிமை அமலாக்கச் (இரண்டாவது) சட்டம், 2002 (2002-ஆம் ஆண்டின் சட்ட எண் 54) -இன் கீழும், பிணையுரிமை (அமலாக்க) விதிகள், 2002 -இன் விதி 3 உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13(12) -இன் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, **03-08-2026** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை அனுப்பி, கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்கள் **1. திரு. சதாசிவம் ந., த/பெ நவநீது சுப்பையா நாயுடு, 2. திரு. அருள்மணிகண்டன் ந., த/பெ நவநீது சுப்பையா நாயுடு** ஆகியோரிடம், அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **ரூ.2,27,348.90 (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்தேழாயிரத்து முந்நூற்று நாற்பத்தெட்டு மற்றும் தொண்ணூறு காசுகள் மட்டும்)** தொகையை, 31/10/2023 நிலவரப்படி, மேற்படி அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தேன்.

கடன்தாரர்கள் அத்தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவெனில், கீழ் கையொப்பமிட்டுள்ள நான், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) உடன் மேற்படி விதிகளின் விதி 8-ஐச் சேர்த்துப் படிக்கப்படும்போது எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை **2026-ஆம் ஆண்டு அக்டோபர் 15-ஆம் நாளான இன்று** சுவாதீனம் எடுத்துக்கொண்டுள்ளேன்.

கடன்தாரர் குறிப்பாகவும் பொதுமக்கள் பொதுவாகவும் மேற்படி சொத்தில் எவ்வித கொடுக்கல் வாங்கலும் செய்ய வேண்டாம் என இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். இச்சொத்து தொடர்பான எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் **ரூ. 2,27,348.90** மற்றும் அதன் மீதான வட்டிக்காக யூனியன் பேங்க் ஆஃப் இந்தியாவிற்கு உள்ள பொறுப்புரிமைக்கு (charge) உட்பட்டதாகும்.

பிணையச் சொத்துகளை மீட்பதற்குக் கடன்தாரருக்குக் கிடைக்கும் கால அவகாசம் தொடர்பாக, சட்டத்தின் பிரிவு 13-இன் உப்பிரிவு (8)-இன் விதிகளின் மீது கடன்தாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையாச் சொத்தின் விவரம் :

வேலூர் மாவட்டம், அரக்கோணம் பதிவு மாவட்டம், காவேரிப்பாக்கம் சார்-பதிவு மாவட்டம், நெமிலி வட்டம், ஆயர்பாடி கிராமம், நத்தம் புல எண் 253 பகுதி, புதிய புல எண் 253/31, காலி மனை மற்றும் மேற்படி காலி மனையின் மீது கட்டப்படவுள்ள வீடு; எல்லைகளும் அளவுகளும் பின்வருமாறு: எல்லைகள்: கிழக்கே: கோவிந்தம்மாள் சொத்து, மேற்கே: வெங்கடேசன் சொத்து, வடக்கே: சந்திரன் சொத்து, தெற்கே: அரக்கோணம் சாலை.

இதன் நடுவில் அளவு: கிழக்கு-மேற்கு வடபுறம் 5.0 மீட்டர், தென்புறம் 5.0 மீட்டர், வடக்கு-தெற்கு கிழக்குப்புறம் 25.4 மீட்டர், மேற்குப்புறம் 26.6 மீட்டர். மொத்த அளவு 118 சதுர மீட்டர், காலி மனை மற்றும் மேற்படி காலி மனையின் மீது கட்டப்படவுள்ள வீடு முதலியன. மேற்படி சொத்து ஆயர்பாடி கிராம ஊராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

தேதி : 15.10.2026
இடம் : திருப்பாற்கடல்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

equitas SMALL FINANCE BANK

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(Formerly Known as Equitas Finance Ltd)
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை , தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050,

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் பொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தார்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் கவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே"** மற்றும் **"என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திருப்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தார(ர்கள்), அடமானதார(ர்கள்), ஜாமீன்தார(ர்கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தார்கள் / அடமானதார்கள் / ஜாமீன்தார்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
திரு ராஜாராம் A C/O திரு ஆறுமுகம் திருமதி சுந்தரி A C/O திரு ஆறுமுகம் இருவரும் வசிக்கும் இடம்: எண் 39/13 MG தெரு, நடுகொண்டபள்ளி கோட்டமிட்டா, குடியாத்தம் Tk வேலூர், குடியாத்தம், வேலூர், தமிழ்நாடு, 632601.	வகை 1: வேலூர் பதிவு மாவட்டம், குடியாத்தம் வட்டம், தனக்கொண்டபள்ளி கிராமத்தில் அமைந்துள்ள புஞ்சை சர்வே எண். 36, நற்போதை உட்பிரிவு சர்வே எண். 36/7-ல், 1,308 சதுர அடி (3 சென்ட்) பரப்பளவு கொண்ட நிலமும் அதிலுள்ள கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். சொத்தின் நான்கு எல்லைகள்: வடக்கு: பட்டை (சாலை); தெற்கு: வெள்ளகள் அவர்களின் சொத்தின் ஒரு பகுதி; கிழக்கு: பட்டை (சாலை); மேற்கு: பலராமன் அவர்களின் மீதமுள்ள நிலம்	ரூ.8,60,000/- ரூ.86,000/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEGDYTM0341400 / 600000103446 22.01.2026 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.5,54,593/- மேலும் 23.01.2026 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.5,44,310/-

சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, மதன்குமார் 9688069365, பூபாலன்.G 9944841879

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 25.11.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www.equitas.bank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணவும்.

உதயேந்திரம் பேரூராட்சி
திருப்பத்தூர் மாவட்டம்

அனைவருக்கும் இனிய ஆயுதபூஜை மற்றும் விஜயதசமி நல்வாழ்த்துக்கள்



பணிகள் விவரம் 2021-2022 முதல் 2025-2026 வரை

வ. எண்	வருடம்	மொத்த பணிகள் எண்ணிக்கை	ஒதுக்கீடு (லட்சத்தில்)
1	2021-22	11	192.31
2	2022-23	12	352.15
3	2023-24	28	1365.46
4	2024-25	28	432.80
5	2025-26	8	311.50
	மொத்தம்	87	2654.22

மாண்புமிகு R.V.ரஞ்சித்குமார்
தமிழக வனத்துறை அமைச்சர்
திருமிகு D.M.கதிர்ஆனந்த M.P.,
வேலூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்

திரு.சையத் பாரூக் பாஷா MLA
வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி

திரு.வே.நல்லசிவன் இ.ஆ.ப.,
திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர்

திரு.கு.வெங்கடேசன்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்.
வேலூர் மண்டலம்



திருமதி.ஆ.பூசாராணி
தலைவர், உதயேந்திரம் பேரூராட்சி

திரு.வெ.கோவிந்தராஜ்,
துணைத் தலைவர்

திரு.ஆ.செல்வராஜ், M.C., Ex. சேர்மன்
திரு.ப.ரவிசங்கர் செயல் அலுவலர் (பொறுப்பு)

மன்ற உறுப்பினர்கள்: கா.சரவணன், எம்.பரிமளா, ரா.மகேஸ்வரி, எம்.கீதா, பா.முனியம்மாள், ப.சந்தியா, ஆ.மரியஜோசப், ரா.ரஞ்சினி, ஆர்.சரவணன், அ.ரமேஷ், கோ.லில்லி, மு.சுகன்யா

உதயேந்திரம் பேரூராட்சி, திருப்பத்தூர் மாவட்டம்